**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No.24 /2016**

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.சரண்யா | தாலுகா | : |
| த/ பெயர் | : | கிராமம் | : |
| க/ பெயர் | : | | |
| வயது | : | மதம் | : |
| தொழில் | : | ஜாதி | : |

**வா.சா.3**
நாள் : 26.09.2023.
நேரம் :12.00 a.m

**முதல் விசாரணை**

**1)** நான் இவ்வழக்கில் நீதிமன்றத்திலிருந்து பரமக்குடி சார் ஆட்சியாளருக்கு வந்த அழைப்பாணைக்கிணங்க சார் ஆட்சியாளர் வழங்கிய அனுமதி கடிதத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சார் ஆட்சியாளர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையில் கேட்கப்பட்ட ஆவணமான பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மனு எண். ப.மு.(பி1) 1251/2014 கோப்பில் உள்ள மனு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் குறுவட்ட நில அலுவலர் கொடுத்த Statement மேற்படி ப.மு.(பி1) 1251/2014 மனுவில் ஏற்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவு பிறப்பித்த வருவாய் கோட்டாட்சியர் மாறுதல் ஆன தேதி ஆவணங்களில் பிறப்பித்த உத்தரவின் சீராய்வுக்காக இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல் முறையீட்டிற்காக கோப்புகள் அனைத்தும் அனுப்பப்பட்டுள்ளது.

2) நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை படித்து பார்த்தேன். உத்தரவு

பிறப்பித்த அலுவலர் என்ற மாற்றப்பட்டார் என்ற குறிப்பை என்னால் தாக்கல் செய்ய இயலும். வருவாய் கோட்டார் அலுவலரிடமிருந்து மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட்ட மேற்படி கோப்புகளை கேட்டு அனுப்ப முடியும் என்று சொன்னால் அனுப்ப முடியும், நான் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தேன். அதற்கான கோப்புகளை எடுத்துவரவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி ஆவணங்கள் நாங்கள் கொடுத்தது. அதிலுள்ள ஆவணங்கள் முறையாகத்தான் உள்ளது.

3) மேற்படி ஆவணத்தில் வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள மனுவின் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொதுபிரிவு (May personally follow up and get the copy of the Patta) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து பட்டா கேட்டால் 6 மாதம் ஒரு வருட காலம் வரை நிலுவையில் இருக்க வாய்ப்புள்ளது.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் 04.09.2014 ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் இவ்வழக்கின் வாதிக்கு எதிருரை தாக்கல் செய்வதற்கு அவகாசம் கேட்டும் கொடுக்காமல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. விவரங்கள் அனைத்தும் அசல் கோப்புகளை பார்வையிட்டால்தான் தெரியும்.

5) வா.சா.ஆ.4 ல் உத்தரவு பிறப்பித்த வருவாய் கோட்டாட்சியர் 04.09.2014 ம் தேதி தான் மாறுதல் ஆகி சென்றுள்ளார். அதை நான் அலுவலக குறிப்பை பார்த்து தான் கூறுகிறேன்.

1) சார் ஆட்சியாளர் வழங்கிய அனுமதி கடிதம் உண்மை நகல் நீ.ம.சா.ஆ.1

2) கோப்புகளை அனுப்பியதற்காக பதிவேடு சான்றிட்ட நகல் நீ.ம.சா.ஆ.2.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) மாவட்ட வருவாய் அலுவலரிடம் உள்ள கோப்புகளை சான்றிட்ட நகலோ, தகவல் அறியும் உரிமை சட்டத்திலோ கேட்டு நகல் பெறுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேல்முறையீட்டுக்கு அனுப்பப்பட்ட கோப்புகளை அந்த மேல்முறையீட்டு அமைப்பில் நிலுவையிலோ, அதிலிருந்து நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டாலோ எங்களால் அந்த கோப்புகளை வரவழைக்க இயலாது என்றால் சரிதான்.

2) தற்போது உள்ள சார் ஆட்சியர் 30 நாட்களுக்குள் பட்டா மாறுதல் உத்திரவு பிறப்பிப்பார் என்றால் சரிதான். சில வழக்குகளில் நிர்வாக காரணத்திற்காக 6 மாதமோ ஒரு வருடமோ கால அவகாசம் ஏற்படலாம் என்று சொன்னால் சரிதான். சார் ஆட்சியர் மாறும் தேதியில் எந்த உத்தரவும் பிறப்பிக்கக்கூடாது என்ற வருவாய்த்துறை நிலை ஆணை ஏதும் கிடையாது என்றால் சரிதான்.

3) மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தரவு ஏதும் பிறக்கப்பட்டுள்ளதா என்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவு ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவிற்கு மேல்முறையீட்டிற்கு வாய்ப்பு இருக்கும்போது சார் ஆட்சியரை குறை கூற முடியாது என்றால் சரிதான். சார் ஆட்சியரிடம் கொடுக்கப்படும் மனுக்கள் உடனடியாக முடிப்பது அவர்களது நிலைப்பாட்டை பொறுத்தது என்றால் சரிதான்.

விசாரணை முடிவுற்ற நேரம்:12.30 P.M